00044

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

விசேட தேவைகள்சார் கல்வியில் சிறப்பு கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

இறுதிப்பரீட்சை - 2024

மட்டம் - 06

**SNE6546/ESU6246**–கலைத்திட்ட அபிவிருத்தி மற்றும் உள்ளடங்கல் வகுப்பறையில் சிறுவர்களுக்கான தழுவலும்

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 08.03.2025 நேரம்: பி.ப 01.30 - பி.ப 04.30

பகுதி **I** இல் சகல வினாக்களுக்கும் பகுதி **II** இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. ‘கலைத்திட்டத் தழுவல்’ (Curriculum Adaption) என்பதை உங்கள் மொழிநடையில் வரைவிலக்கணப்படுத்துக.
2. உலகளாவிய கற்றல் வடிவமைப்பு (Universal Design for Learning) ஒரு உள்ளடங்கல் வகுப்பறையில் பல்வகைத் தேவையுடையயோருக்கு உதவும் **ஐந்து (05)** வழிகளைப் பட்டியற்படுத்துக.
3. இரண்டு (02) முக்கிய வகை கலைத்திட்டத் தழுவல்களைக் குறிப்பிட்டு அவற்றை எடுத்துக்காட்டுக்களுடன் சுருக்கமாக விளக்குக.
4. இன்றைய வகுப்பறைகளில் மாணவர்களுக்கு கற்பிக்கும் போது ‘ஒரே அளவு அனைவருக்கும் பொருந்தாது’ (one size does not fit all) என்ற எண்ணக்கருவை ஆதரிக்கும் **ஐந்து** (05) விடயங்களைக் குறிப்பிடுக.
5. உள்ளடங்கல் வகுப்பறையில் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் மாணவர்களின் ‘கற்றல் சுயவிபரக் கோவை’ (Learning profiles) ஆசிரியர்களுக்கு முக்கியமானது. ஒரு மாணவரின் கற்றல் சுயவிபரக் கோவையில் உள்ளடக்கப்பட வேண்டிய **ஐந்து** (05) முக்கிய கூறுகளைக் குறிப்பிடுக.
6. உள்ளடங்கல் வகுப்பறையில் செயற்படுத்தக்கூடிய வேறுபட்ட அறிவுறுத்தலின் (Differentiated Instruction) முறைகளைக் குறிப்பிடுக.
7. உள்ளடங்கல் வகுப்பறைக் கற்றலில் மாணவர் ஈடுபாட்டை அதிகரிக்கப் பயக்படுத்தக்கூடிய **ஐந்து** (05) உத்திகளைப் பட்டியலிடுக.
8. விசேட கல்வித் தேவைகள் உள்ள குழந்தைகளுக்கு கற்பிக்க விகோட்ஸ்கியின் அண்மை விருத்தி வலயம் (Vygotsky’s Zone of Proximal Development) கோட்பாட்டை ஆசிரியர்கள் எவ்வாறு செயற்படுத்தலாம்? **ஐந்து** (05) உதாரணங்களை முன்வைக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**



61

## பகுதி – II

**9.** **அ.** உள்ளடங்கல் வகுப்பறை நடைமுறையில் மாணவர்களின் அதிக அளவில் இடைவிலகலைக் குறைக்க, கவனிக்க வேண்டிய **ஐந்து** (05) கல்வித் திறன்களைச் சுருக்கமாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ஆ.** உள்ளடங்கல் வகுப்பறையில் கலைத்திட்டத் தழுவலின் முக்கியத்துவம் தொடர்பில் உங்கள் கருத்துக்களை எடுத்துக்காட்டுக்களை முன்வைத்து விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**இ.** உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியராக, இலங்கையில் உள்ளடங்கல் வகுப்பறைச் சூழலில் கலைத்திட்டத் தழுவலை எவ்வாறு பயன்படுத்தலாம்? உங்கள் பதிலுக்கு உதவப் பொருத்தமான எடுத்துக்காட்டுக்களை வழங்குக.

**(08 புள்ளிகள்)**

**10.** **அ.** உள்ளடங்கல் வகுப்பறையில் வகுப்பறைப் பல்வகைமைக்கும் 'வேறுபடுத்தப்பட்ட அறிவுறுத்தலுக்கும்' இடையிலான தொடர்பின் முக்கியத்துவத்தைச் சுருக்கமாக விளக்குக.

**(06 புள்ளிகள்)**

**ஆ.** விசேட கல்வித் தேவைகள் உள்ள மாணவர்களுக்கு வேறுபடுத்தப்பட்ட அறிவுறுத்தலை செயற்படுத்துவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களை விவரிக்குக.

**(06 புள்ளிகள்)**

**இ.** உள்ளடங்கல் வகுப்பறை ஆசிரியராக, பெற்றோர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தின் ஆதரவுடன் மேலே குறிப்பிடப்பட்ட சவால்களை எவ்வாறு சமாளிக்க முடியும்?

**(08 புள்ளிகள்)**

**11.** **அ.** 'பாடசாலை அமைப்பில் உலகளாவிய கற்றல் வடிவமைப்பு' என்பதன் பொருள் யாது?

**(04 புள்ளிகள்)**

**ஆ.** கற்றலுக்கான உலகளாவிய வடிவமைப்பின் முக்கிய கொள்கைகளைச் சுருக்கமாக விளக்கி, உள்ளடங்கல் வகுப்பறையில் இந்த கொள்கைகள் ஏன் முக்கியத்துவம் வாய்ந்தவை என்பதை ஆராய்க.

**(07 புள்ளிகள்)**

**இ.** உங்கள் உள்ளடங்கல் வகுப்பறையில் நீங்கள் கற்பிக்கும் ஒரு பாடத்தைத் தேர்ந்தெடுத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட பாடத்தில் கற்றலுக்கான உலகளாவிய கற்றல் வடிவமைப்பின் முக்கிய கொள்கைகளை நீங்கள் பயன்படுத்துவீர் என்பதை விவரிக்குக.

**(09 புள்ளிகள்)**

**12.** **அ.** மாணவர்களின் கற்றற் பாணிகளை எடுத்துக்காட்டுக்களுடன் சுருக்கமாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ஆ.** மாணவர்களின் வேறுபட்ட கற்றற் பாணிகள் அவர்களின் வளர்ச்சிக்கான திறனை எவ்வாறு மேம்படுத்துகின்றன. என்பதை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(07 புள்ளிகள்)**

**இ.** கற்பித்தல் மற்றும் கற்றற் செயற்பாட்டில் மாணவர்களின் ஆர்வத்தை விலாசப்படுத்த இலங்கை உள்ளடங்கல் வகுப்பறைகளில் உள்ள வாய்ப்புக்கள் மற்றும் தடைகள் யாவை? எடுத்துக்காட்டுக்களை முன்வைக்குக.

**(08 புள்ளிகள்)**



62

**13.** அ. கலைத்திட்டத் தழுவல்களை எளிதாக்குவதில் உதவி தொழில்நுட்பத்தின் பங்கை எடுத்துக்காட்டுக்களை மேற்கோள் காட்டி விளக்குக.

**(05 புள்ளிகள்)**

ஆ. உள்ளடங்கல் வகுப்பறையில் பாடத்திட்டத்தை மாற்றியமைக்காததன் விளைவுகளை விவரிக்குக.

**(07 புள்ளிகள்)**

இ. உள்ளடங்கல் வகுப்பறையில் கற்பித்தல் - கற்றல் செயற்பாட்டில் எண்சார் கற்றல் இயலாமை (Dyscalculia) உள்ள மாணவர்களுக்கு நீங்கள் எவ்வாறு உதவுவீர்கள் என்பதை ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

**14.** "வகுப்பறைச் சூழல் அல்லது சூழல் மாணவர்களின் கற்றல், கவனம், நடத்தை மற்றும் தனிப்பட்ட உறவுகளை உருவாக்கும் திறனை கணிசமாகப் பாதிக்கும்".

அ. 'உள்ளடங்கற் கற்றற் சூழலை' வரையறுக்குக.

**(05 புள்ளிகள்)**

ஆ. உள்ளடங்கல் வகுப்பறையில் சிறந்த கற்றல் சூழலை உருவாக்கும் போது கருத்தில் கொள்ள வேண்டிய முக்கியமான காரணிகளை எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(06 புள்ளிகள்)**

இ. உள்ளடங்கல் வகுப்பறையில் விசேட கல்வித் தேவைகள் உள்ள மாணவர்களுக்கு பெஞ்ஜமின் புளூமின் வகைபிரித்தலை ஆசிரியர்கள் எவ்வாறு பிரயோகம் செய்யலாம் என்பதை ஆராய்க.

**(08 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*